


கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (14.3.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், கழக சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர். பாலு, முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு. கழக துணைப் பொதுச் செயலாளர்கள் ஐ. பெரியசாமி, முனைவர் க.பொன்முடி, ஆ.ராசா, அரசு தலைமை கொறடா கா. ராமச்சந்திரன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக தலைமை செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், அமைச்சர் பெருமக்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.




ஈரோடு கருங்கல்பாளையத்தில் அமைந்துள்ள உத்தமர் காந்தி அவர்களின் புதுப்பிக்கப்பட்ட திருவுருவச் சிலையையும், பொதுமக்களின் பயன்பாட்டிற்காக உத்தமர் காந்தியடிகள் நூலகத்தையும் ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சருமான சு.முத்துசாமி திறந்து வைத்தார். நிகழ்வில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு. புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி ல்லாலங்குடி குருராகவேந்திரா திருமண மஹாலில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. அயலக அணி சார்பில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் சட்டத்துறை அமைச்சர், எஸ். ரகுபதி, அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் ஞான.இளங்கோவன், ஸ்ரீதேவி அண்ணாத்துரை, ஒன்றியச் செயலாளர்கள் டி.தங்கமணி, அரு.வடிவேல், கே.எஸ்.ரவி, பொதுக்குழு உறுப்பினர் கே.எம்.சுப்பிரமணியன், ஆலங்குடி பேரூர் கழக செயலாளர் ஆ.பழனிக்குமார், பேரூராட்சி தலைவர் ராசி முருகானந்தம், எம்.ஜி.(எ) ராமச்சந்திரன், ரத்தினவேலு, ஆர்ட்டிஸ்ட் முருகேசன் மற்றும் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.




கோவை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கவுண்டம்பாளையம் தொகுதி இடிகரையில் தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும் ஒன்றிய அரசுக்கு எதிரான கண்டனப் பொதுக்கூட்டத்திற்கு கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ. ரவி தலைமை தாங்கினார். மாநில மாணவரணி துணை செயலாளர் வி.ஜி.கோகுல், தலைமை கழக பேச்சாளர் நெல்லை ஜான் ஆகியோர் கண்டன எழுச்சி உரையாற்றினார்கள். இதில் கழகத் தொண்டர்கள் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.




கோவை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சூலூர் சட்டமன்ற தொகுதி கருமத்தம்பட்டி சோமனூர் பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும் ஒன்றிய அரசுக்கு எதிரான கண்டனப் பொதுக்கூட்டத்திற்கு தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் தளபதி முருகேசன் தலைமை தாங்கினார். தலைமைக் கழகப் பேச்சாளர்கள் ஆரணி மாலா, கூடலூர் பாண்டியராஜ் ஆகியோர் கண்டன எழுச்சி உரையாற்றினார்கள். இதில் கழகத் தொண்டர்கள் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.